மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

5—

சொந்தக் கட்டடம்

***28918—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கணபதிபாளையம் ஊராட்சி, பெத்தாம்பாளையம் அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், கழகக் குடும்பங்களின் குல தெய்வம், குடும்ப தெய்வம், மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கணபதிபாளையம் கிராம ஊராட்சி, பெத்தாம்பாளையம் கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையம், அதே பகுதியைச் சேர்ந்த கள்ளிமேட்டில் உள்ள சுய உதவிக் குழு கட்டடத்தில் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இந்த மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அவசியம் ஏற்படவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள்தொகை அதிகமாக இருக்கக்கூடிய பகுதியில், அதே பல்லடம் தொகுதி, கணபதிபாளையம் பகுதியிலே புதிதாக கட்டடம் கட்ட வேண்டுமென்று விரும்புவார்களேயானால், மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 டிசம்பர் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர், என்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி 3½ ஆண்டுக் கால ஆட்சியில் தமிழகம் முதன்மை மாநிலமாகச் சிறந்து விளங்கிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் எனக்கு இந்தக் கேள்வியைக் கேட்க வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் வணங்கி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி தெரிவிப்பதோடு, பல்லடம் தொகுதி, கணபதிபாளையம் ஊராட்சியில் இரண்டு இடங்களிலுமே அங்கன்வாடி மையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணபதிபாளையம், பெத்தாம்பாளையம் என இரண்டு இடங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த இரண்டு இடங்களிலும் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, அதனடிப்படையில் அங்கன்வாடி மையம் அமைப்பதற்கு உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ஆலோசனை பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

நூலகக் கட்டடம்

***36021— திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் அரசு கலைக் கல்லூரியில் நூலகத்திற்கென தனியாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி எனது பதிலைக் கூறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் அரசு கலைக் கல்லூரியில் 90 வகுப்பறைகள் உள்ளன. இதில் தற்பொழுது 1,200 சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்தில் ஒரு நூலகம் இயங்கி வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, வரலாற்றுச் சிறப்புப் பெற்ற சேலம் அரசு கலைக் கல்லூரி*